# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## ஜனாதிபதித் தேர்தல் - 2024

## பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல்கள்

இலங்கை தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் படி, மக்களுக்குரிய வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமை ஆகிய உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. தேர்தல் காலப்பகுதியில் மற்றும் வாக்கெடுப்பு நடாத்தப்படும் தினத்தில், தேர்தல் முடிவடைந்த காலப் பகுதியில் அனைத்து பொலீஸ் உத்தியோகத்தர்களும் பின்வரும் வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும்.

(அ) தேர்தல் காலப் பகுதியில், வாக்கெடுப்பு நடாத்தப்படும் தினத்தில் மற்றும் அதன் பின்னரான காலப் பகுதியில் நிகழும் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் மற்றும் விசாரிப்பதனை இலங்கை அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையை மீறாத வகையில் மேற்கொள்ளல் வேண்டும். அரசியலமைப்பின் அந்த உறுப்புரை மூலம் சட்டத்தின் முன் அனைத்து நபர்களும் சமம் என்றும், சட்டத்தின் பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கு அனைவருக்கும் அடிப்படை உரிமை உண்டு உறுதிப்படுத்தப்படுகின்றது. ஏதேனுமொரு முறைப்பாடு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை அல்லது தட்டிக்கழித்தல் அல்லது தவிர்த்தால் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக பொலீஸ் பொறுப்புக்கூற வேண்டும்.

(ஆ) பொலிஸாரிடம் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை பக்கச்சார்பின்றியும், ஒரு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலும் மேற்கொள்ள வேண்டும். அரசியல் அழுத்தங்கள் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணங்களினால் அவ்வாறு செய்யத் தவறினால் அது இலங்கையின் அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையை மீறுவதாகக் கருதப்படுகிறது.

(இ) பொலீஸாரினால் அல்லது ஏனைய தரப்பினரின் தூண்டுதலின் பேரிலோ, சித்திரவதை அல்லது குரூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவாக நடாத்தப்படல் அல்லது தண்டனை உட்பட எந்தவொரு வன்முறைக்கும் பொலீஸார் பொதுமக்களை உட்படுத்தக் கூடாது.

சேதப்படுத்துதல் அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்த வேண்டியது பொலீஸ் அதிகாரியின் கடமையாகும். சட்டத்தை அமுல்படுத்தத் தவறுதல் இலங்கை அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரையை மீறுவதாகும்.

(ஓ) தேர்தலுக்குப் பின்னைய வன்முறைகள் உட்பட தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகளைத் தடுப்பது பொலீஸாரின் பொறுப்பாகும். கடந்த கால அனுபவங்களின்படி, அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் தேர்தல் வன்முறைக்கு அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், பொலீஸார் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்தி, அடிப்படை உரிமை மீறல்களைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

(ஔ) தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சார நடவடிக்கைகளின்போதும் தேர்தலுக்குப் பிந்தைய தேர்தல் வெற்றிகளைக் கொண்டாடும் நடவடிக்கைகளின்போதும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.

**எல்.ரீ.பி.தெஹிதெனிய**
உயர் நீதிமன்ற நீதிபதி (முன்னாள்)
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

2024 யூலை 31